# குமரகம்

***Multipurpose Event Venue***

காளப்பாநாயக்கன்பாளையம், கோவை–641108

WWW.kumaragam.com Facebook: kumaragam smart venue

---

## <u>RULES AND REGULATIONS</u>

1. விழா நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட நேரமானது 20…….. வருடம் ………மாதம் …….. தேதி காலை / மாலை …………மணியிலிருந்து மாலை / இரவு………… மணிவரை மட்டுமே.
2. முன்பதிவு செய்யும் பொழுதோ அல்லது முன்பதிவு செய்த ஒரு வாரத்திற்குள்ளாகவோ வாடகையை முழுவதுமாக செலுத்தினால் மட்டுமே விழா தேதி உறுதி செய்யப்படும்.
3. எக்காரணம் கொண்டும் விழா தேதியில் மாற்றம் செய்யப்படமாட்டாது. விழாதேதி மாற்றத்தினாலோ அல்லது வேறு காரணங்களாலோ விழா நடத்த முடியாமல் போகும் பட்சத்தில் செலுத்திய வாடகையை திரும்ப தரப்பட மாட்டாது.
4. மற்ற விழாக்கள் நடத்த இடம் சுத்தம் செய்து தர வேண்டி உள்ளதால், விழாவை அனுமதிக்கப்பட்ட நேரத்தில் முடித்து உடனடியாக காலி செய்து தர வேண்டும்.
5. சமையல் எரிவாயு சிலிண்டர்கள் குமரகத்தில் உள்ளது,அதற்குண்டான கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் வெளியிலிருந்து கொண்டு வரப்படும் வீட்டு மற்றும் வர்த்தக உபயோக சிலிண்டர்களை உள்ளே அனுமதிப்பதில்லை.
6. வேண்டிய அளவு ஆழ்குழாய் கிணற்று நீர் வழங்கப்படும், குடிப்பதற்கும், சமைப்பதற்கும் நல்ல தண்ணீர் தேவைப்பட்டால் நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்து தரப்படும். அதற்குண்டான கட்டணத்தை செலுத்த வேண்டும்.
7. விழா நடத்துபவர்களால் ஏற்பாடு செய்யப்படும் சமையல்காரர்கள் ஒளி, ஒலி அமைப்பாளர்கள், அலங்கார வேலை அமைப்பாளர்கள் ஆகியோர் குமரகம் நிர்வாகத்தினரின் முன் அனுமதி பெற்றே உள்ளே அனுமதிக்கப்படுவர்.
8. அவ்வாறு அனுமதிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் குமரகத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே செயல்படவேண்டும். அவ்வாறு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு விபத்தினால் ஏற்படும் சேதங்களுக்கு குமரகம் நிர்வாகம் எந்த

விதத்திலும் பொறுப்பேற்காது. அந்த தொழிலாளர்களை பணி அமர்த்தும் நிர்வாகமே பொறுப்பேற்க வேண்டும்.

9. ஆர்கெஸ்ட்ரா ஏற்பாடு செய்யும் பொழுது அதற்கு உண்டான மின் தேவைக்கு தனியாக ஜெனரேட்டர் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குமரகத்தின் மின் இணைப்பு மற்றும் ஜெனரேட்டரில் இருந்து எக்காரணம் கொண்டும் மின்சாரம் வழங்கப்பட மாட்டாது.
10. ஆர்கெஸ்ட்ரா நிகழ்ச்சி நடக்கும் பொழுது ஒலி அளவை குறைவாக வைத்து அருகில் உள்ள குடியிருப்புகளுக்கு இடையூறு தராமல் இரவு 9.30 மணிக்குள் முடித்துக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் இரவு 9.30 மணிக்கு மேல் அனுமதி இல்லை. அரங்கத்திற்கு வெளியே ஒலி பெருக்கி வைக்க அனுமதி இல்லை.
11. குமரக நிர்வாகத்தால் போதிய அளவு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அதற்கு மேல் மின் விளக்குகள் மற்றும் அலங்கார விளக்குகள் தேவைப்பட்டால் விழா நடத்துபவர்கள் தனியாக ஜெனரேட்டர் வைத்து ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குமரகத்தின் மின் இணைப்புகளிலிருந்து மின்சாரம் வழங்கப்பட மாட்டாது. ஏனெனில் நிர்வாகத்திடம் Extra Load கிடையாது.
12. குமரக நிர்வாகத்தால் பொருத்தப்பட்டுள்ள அலங்கார மற்றும் மின் விளக்குகள் எரிய விட தனியாக கட்டணம் உண்டு. அவைகளை உபயோகிக்க ஜெனரேட்டர் மூலமே மின் சப்ளை செய்யப்படும். அதற்கு தனியாக கட்டணம் செலுத்த வேண்டும்.
13. விழா நடத்துபவர்கள் தங்களது உடமைகளை அவரவர் பொறுப்பிலேயே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நிர்வாகம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.
14. சமையல் பாத்திரங்கள் கழுவும்பொழுது உண்டாகும் Sewage Water - ஐ எடுப்பதற்கு உண்டான கட்டணத்தை தனியே செலுத்த வேண்டும்.
15. பெற்றோர்கள் குழந்தைகளை விளையாட்டுப் பகுதியில் அவரவர் பொறுப்பிலேயே பாதுகாப்பாக விளையாட விட்டு கண்காணித்து கொள்ள வேண்டும். விபத்துகளுக்கு நிர்வாகம் பொறுப்பேற்காது.
16. சேர்கள், டேபிள்கள், மின் விசிறிகள், விளக்குகள் ஆகியவற்றை விழா நடத்துபவர்கள் பத்திரமாக கையாள வேண்டும். மேற்படி பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டால் முழுத்தொகையும் வசூலிக்கப்படும்.
17. விழா நடத்துபவர்கள் அலங்கார ஏற்பாடுகள் செய்யும் பொழுது புல்தரை மற்றும் கட்டிட அமைப்புகளுக்கு எந்தவித சேதாரம் ஏற்படுத்தாமல் நடந்து கொள்ள வேண்டும். மீறி சேதப்படுத்தினால் உரிய கட்டணம் வசூலிக்கப்படும்.

18. பிளாஸ்டிக் கப், டம்ளர், பிளேட்டுகள் உபயோகப்படுத்தக் கூடாது. விழா நடத்துபவர்கள் போதிய அளவு ஆட்களை நியமித்து உணவருந்தும் பொழுது கப், பிளேட், இலை ஆகியவற்றை உடனுக்குடன் அப்புறப்படுத்தி சுத்தம் செய்து கொள்ள வேண்டும். போதிய அளவு குப்பை கூடைகள் நிர்வாகத்தினரால் வழங்கப்படும்.
19. புகை பிடிக்கவோ, சீட்டு விளையாடவோ மற்றும் மது அருந்தவோ கண்டிப்பாக உள்ளே அனுமதி இல்லை.
20. விழாவிற்கு வரும் வாகனங்களை முறைப்படுத்தி PARKING க்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் நிறுத்த குறைந்த படசம் 5 Security ஆட்கள் கண்டிப்பாக நிர்வாகத்தால் ஏற்பாடு செய்து தரப்படும். அதற்குண்டான கட்டணத்தை தனியே செலுத்த வேண்டும்
21. ஆர்கெஸ்ட்ரா மற்றும் DJஉபயோகிக்கும் பொழுது புல் தரையில் கண்டிப்பாக Dance ஆடக் கூடாது.

மேற்படி சட்டதிட்டங்களை படித்துப் பார்த்தேன். அதற்கு உடன்பட்டு நடந்து கொள்ள சம்மதிக்கிறேன். எனவே வாடகை முன் பணத்தை பெற்றுக் கொண்டு மேற்கண்ட தேதியில் விழா அரங்கை உபயோகப்படுத்த அனுமதி தர வேண்டுகிறேன்.

**குமரகம் நிர்வாகத்தினர்** **விழா நடத்துபவர்**